ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1866/7 - 2014 ජූනි මස 10 වැනි අඟහරුවාදා - 2014.06.10

*1866/7 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

LA/2073

### 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஹக்மனை நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் நீர் பம்பியிடல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டொன்றை எடுத்துக்கொள்வதற்குத் தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமை கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2014, யூன் 04.*
*5/2/1/1042*

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், ஹக்மனை பிரதேச செயலாளர் பிரிவில், உடுபில்லேகொடை கிராம அலுவலர் பிரிவின், உடுபில்லேகொடை எனும் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுதர்மாராம புராண விஹார இடம் எனும் காணித்துண்டு காண்பிக்கப்படுமாறு அதிகாரமளிக்கப்பட்ட நிலஅளவையாளர் திரு. எச். ஜே. சமரபால அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 3364 ஐக் கொண்ட வரைபட துண்டு இலக்கம் 1 என குறிப்பிடப்பட்டுள்ள 2 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஹக்மனையில் இருந்து கரதொட்ட வரையிலான பிரதேச சபை வீதி ; |
| கிழக்கு | : | இதே காணியின் எஞ்சிய பகுதி; |
| தெற்கு | : | இதே காணியின் எஞ்சிய பகுதி ; |
| மேற்கு | : | ஏரி. |

*உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* விஹாராதிபதி,
ஸ்ரீ சுதர்மாராம புராண விஹாரை,
உடுபில்லேகொடை,
ஹக்மனை.

*6 - 731*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*